திரு. எம். தேவராசன் : கூடலூர் தாலுகாவில், மசனகுடி சில்க் பார்ம் இருக்கிறது. அது நல்லமுறையில் செயல்படுகிறதா? அதில் எவ்வளவு உற்பத்தி செய்யப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தனிக் கேள்வி போட்டால் சொல்கிறேன்.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, வங்காளத்தில் தயாரிக்கப்படுகிற கதர்ப்பட்டு புடவைகள் தரமாக உள்ளன என்று கூறப்படுகிறது. குறைந்த விலையில் கிடைப்பதாகவும் சொல்லப்படுகிறது. இங்கு நமக்கு நல்ல லாபம் வருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே, மற்ற மாநிலங்களோடு போட்டியிடுகின்ற முறையிலே குறைந்த விலையில், தரத்தை உயர்த்தி விற்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : பட்டுப்புடவையில் தரம் என்று சொன்னால், இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலேதான் சிறந்த தரம் இருக்கிறது. அது கைத்தறியாக இருந்தாலும் சரி, கதராக இருந்தாலும் சரி. குறைந்த விலையிலே தயார் செய்கின்ற நிலையிலேதான் மற்ற மாநிலங்களிலே தயாரிக்கிறார்கள். இருந்தாலும் தரத்தை, விலையை வைத்து எடை பார்த்தால், நம்முடையதுதான் உயர்ந்த தரமுள்ளது, விலையும் குறைந்தது என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

சித்தலவாடி கிராம பின்தங்கிய வகுப்பு மக்களுக்கு வீட்டு மனைகள்

* 216 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், சித்தலவாடி கிராமத்திலுள்ள வெட்டுக்கட்டிப் பகுதியில் வசிக்கும் பின்தங்கிய மக்களுக்கு வீட்டுமனை வழங்க நிலம் கையகப் படுத்தும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.